# சகலமும் நன்மைக்கு ஏதுவாக



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

நம்முடைய இருதயத்தின் வாசலில் இயேசுவானவர் படுத்திருக்கிறார் என்பதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். அவருக்குத் தெரியாமல் நாம் வெளியே செல்லவோ அல்லது எந்தக் காரியத்தையும் செய்யவோ முடியாது. எனவே அவரிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்க அவர் சகலத்தையும் நன்மைக்கேதுவாக செய்கிறார்.




சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# ரோமர் 8:28

அன்றியும், அவருடைய
தீர்மானத்தின்படி
அழைக்கப்பட்டவர்களாய்த்
தேவனிடத்தில்
அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும்
நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று
அறிந்திருக்கிறோம்.



இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

## செய்தி: 60-1225 தேவனுடைய சுற்றப்பட்ட வெகுமதி

ஒரு மேய்ப்பன் ஆடுகளை மந்தை யாகக் கூட்டி, அந்த ஆடுகளோடே சரியாக வாசலண்டையிலேயே படுத்துக் கொள்கி றான். அவைகளுக்கு மத்தியிலே படுத்துக் கொள்கிறான் என்பதை எவரும் அறிவர்.

இயேசு, "நானே ஆட்டுத் தொழுவத் திற்கு வாசல்" என்றார். நான் புனித தேசங்களில் .......... இல்லை சரியாகக் கூறினால் கிழக்கு தேசங்களில் இருக்கும் வரையில் அது எப்படி அவ்விதம் இருக்கும் என்று நான் அடிக்கடி

வியந்திருக்கிறேன். மேய்ப்பனானவன் எவ்வாறு ஆடுகளை உள்ளே அனுப்பிய பின்னர் கதவண்டை படுத்துக் கொள்கிறான் என்பதை கண்டறிந்தேன்.

ஆடு அவனைக் கடந்து செல்லாமல் வெளியேற முடியாது. ஓநாய் அவனைக் கடந்து செல்லாமல் உள்ளே வரமுடியாது. அவனே வாசலாய் இருக்கிறான்.

70. **நம்முடைய இருதயத்தின் வாசலில் இயேசுவானவர் படுத்திருக்கிறார் என்பதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன்.**

**அவருக்குத் தெரியாமல் நாம் வெளியே செல்லவோ அல்லது எந்தக் காரியத்தையும் செய்யவோ முடியாது.**

**எனவே அவரிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு அவர் சகலத்தையும் நன்மைக்கேதுவாக செய்கிறார்.**

அதுவோ, “ஏதோ காரியம் வந்து கொண்டிருக்கும் போது அதற்காக

ஆயத்தப்படும்படி நம்மை எச்சரித்து, நம்முடைய இருதயத்தின் வாசலண்டை யிலே படுத்துக்கிடக்கும் ஒரு - ஒரு - ஒரு மேய்ப்பனுக்காக, ஒரு இரட்சகருக்காக தேவனுக்கு நன்றி செலுத்தக்" கூறி, தேவனைத் துதித்து, ஆரவாரமிட்டு நம்மை கூச்சலிடும்படி செய்ய வேண்டியதாய் உள்ளது. ஆம்.

---



**தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதாக வேதம் உரைக்கிறது. அப்படியானால் நீங்கள் தேவனிடத்தில் அன்புகூர்ந்து, பிறகு உலகத்துக்குத் திரும்பிச் செல்வீர்களானால், நீங்கள் பாவத்தில் மரிக்கும்படி தேவன் விட்டு விடுவாரா, அல்லது அவர் உங்களை எடுத்துக் கொள்வதற்கு முன்பு நீங்கள் ஒப்புரவாகி அவரிடம் திரும்பும்படி செய்வாரா?**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# ரோமர் 8:28

**அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.**



இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

## செய்தி: 61-10-15 M கேள்விகளும் பதில்களும் COD #15

168. **தேவனிடத்தில் அன்புகூருகிறவர் களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதாக வேதம் உரைக்கிறது. அப்படி யானால் நீங்கள் தேவனிடத்தில் அன்பு கூர்ந்து, பிறகு உலகத்துக்குத் திரும்பிச் செல்வீர்களானால், நீங்கள் பாவத்தில் மரிக்கும்படி தேவன் விட்டு விடுவாரா, அல்லது அவர் உங்களை எடுத்துக் கொள்வதற்கு முன்பு நீங்கள் ஒப்புரவாகி அவரிடம் திரும்பும்படி செய்வாரா?**

202. அந்த பெண்மணி, இதற்கு கையொப்பமிட்டிருக்கிறாள். எனவே அது ஒரு பெண்மணி என்று (பாருங்கள்?)

அவள் கையொப்பமிட்டுள்ளதால் என்னால் கூற முடிகிறது. ஆம், சகோதரியே. நீ பிறந்திருந்தால்.... இப்பொழுது, இதை நான் உன்னிடம் கூறட்டும். பார், தற்காலிகமாக, சிறு விஷயங்களில், நாம் ஒவ்வொருவருமே ஒரு நாளில் பலமுறை பின் மாற்றம் அடைகிறோம். அது நமக்குத் தெரியும். நாம் ஒவ்வொருவருமே அதைக் குறித்து குற்றமுள்ளவர்களாயிருக்கிறோம்; நம்மில் எவருமே பிழையற்றவர் அல்ல. இந்த சரீரத்தில் நாம் உள்ள வரைக்கும், நாம் இன்னும்... ஜனங்கள் எவ்வளவுதான், "நான் பரிசுத்தமடைந்து விட்டேன், நான் அந்த ஸ்திரீயை முத்தமிடலாம், அல்லது அதைச் செய்யலாம்" என்று சொன்னாலும், அவர் பொய் சொல்லுகிறார்; அவரால் முடியாது. இப்பொழுது, அவ்வளவுதான்.

203. "கர்த்தாவே, நான் அதற்கு எவ்வளவு அருகாமையில் செல்ல முடியும் என்பதைக் காணட்டும்" என்று நான் கூற முயல்வதில்லை. அது "கர்த்தாவே, அதை

விட்டு எவ்வளவு தூரம் நான் விலகி யிருக்க முடியுமோ, அங்கு என்னை வைத் திரும்" என்பதாய் உள்ளது. பாருங்கள்? எவ்வளவு தூரம் உங்களால் விலகியிருக்க முடியுமோ, அவ்வளவு தூரம் விலகி யிருங்கள். நீங்கள் இன்னும் மானிடர் என்பதை நினைவுகூருங்கள். பாருங்கள்?

204. மற்றும்... இப்பொழுது நீங்கள் ஏதாவதொரு தவறைச் செய்வீர்களானால்... நீங்கள் வேண்டுமென்று செய்யவில்லை ... நீங்கள் கிறிஸ்தவராக, மறுபடியும் பிறந்த கிறிஸ்தவராக இருந்தால், நீங்கள் தவறு செய்ய எண்ணங்கொள்வதில்லை. உங்கள் எண்ணங்கள் மற்றும் எல்லாமே சரியா யிருக்கும். ஆனால் நீங்கள், ஏதாவதொரு தவறு செய்வீர்களானால், இந்த பெண் இங்கு சொன்னது போல, நீங்கள் அதில் தொடர்ந்து சென்று கொண்டேயிருந்து, இழக்கப்பட்டு, மரிக்கும்படி தேவன் விட்டு விடுவாரா, அல்லது நீங்கள் ஒப்புரவாகி, உங்களைத் திரும்பக் கொண்டு வருவாரா?

அவர் உங்களைத் திரும்பக் கொண்டு வருவார்.

205. நீங்கள் ஏதாகிலும் தவறு செய்து, அது உங்களைக் குற்றப்படுத்தாமல், நீங்கள் அதில் தொடர்ந்து சென்று கொண் டிருப்பீர்களானால், நீங்கள் முதற்கண் இரட்சிக்கப்படவேயில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். அது உண்மை. நீங்கள் இரட்சிக்கப்படவேயில்லை; நீங்கள் ஏதோ ஒரு பாவனை விசுவாசத்தை கொண்டிருந்தீர்கள். நீங்கள் இரட்சிக்கப் படவேயில்லை. நீங்கள் இரட்சிக்கப்படும் போது, உங்களுக்கு வேறு ஆவி உள்ளது; உங்கள் சுபாவம் வித்தியாசமாகி விடு கிறது. நீங்கள் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாயிருக்கிறீர்கள், பழையவைகள் ஒழிந்து போய், அவை மரித்து மறதி என்னும் கடலில் புதைக்கப்படுகின்றன. பாருங்கள்?

206. மற்றும்... ஆனால் இந்த உலகத்தில் நீங்கள் வாழ்ந்து கொண் டிருக்கையில், உங்களுக்கு எல்லாவிடங் களிலும் கண்ணிகள் வைக்கப்படுகின்றன, உங்கள் கண்களை கிறிஸ்துவின் மேல் வைத்து நீங்கள் நடந்து கொண்டிருக் கிறீர்கள். இதை ஞாபகம் கொள்ளுங்கள், நீங்கள் தவறு செய்வீர்களானால், ஒரு உண்மையான கிறிஸ்தவன் ஒப்புரவாகி விரைவில் திரும்பி வந்து விடுவான்.

207. பாருங்கள், பேழையிலிருந்து தேவன் காகத்தை வெளியே அனுப்பினார் - நோவா காகத்தை வெளியே அனுப்பினான். இப்பொழுது, அது யார்? அது ஒரு காகம். ஓ, ஆமாம், அது புறாவுடன் கூட ஒரே இடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தது. அவையிரண்டுமே ஒரே இடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தன; ஆனால் அவன் காகத்தை வெளியே அனுப்பின போது, நல்லது. அந்த... லட்சக்கணக்கான ஜனங்களின் உடல்கள்

உப்பிப் போய், அழுகி, குதிரைகளும் மிருகங்களும் மூழ்கி செத்து, தண்ணீர் நாற்றமெடுத்திருக்கும் என்று எண்ணுகி றேன். முழு உலகமே அழிக்கப்பட்டது. அந்த செத்த பிணங்கள் தண்ணீரின் மேல் மிதந்து கொண்டிருந்தன. நோவா புறாவை வெளியே அனுப்பினான், ஏனெனில் சிறிது சூரிய வெளிச்சத்தை அவன் கண்டதாக எண்ணினான். தண்ணீர் மட்டம் இறங்கி விட்டதா என்று அறிய, அவன் காகத்தை வெளியே அனுப்பினான். ஆனால் காகமோ பறந்து பிணத்தின் மேல் இறங்கி, "என்னே , இது அருமையானது; மிகவும் நன்றாயுள்ளது" என்றது. பாருங்கள். அது பிணத்தை தின்று கொண்டிருந்தது. ஏன்? அதுதான் அதன் இயல்பு. அது ஒரு காகம். அது எவ்வளவு தான் புறாவுடன் உட்கார்ந்து கொண்டிருந்த போதிலும், அது எவ்வளவுதான் நோவாவின் பிரசங்கத் தைக் கேட்டிருந்த போதிலும், அது எவ்வளவு தான் இந்த சுத்தமான

பறவையுடன் உட்கார்ந்து கொண்டிருந்த போதிலும், அது தொடக்கத்திலேயே ஒரு காகமாயிருந்தது. தன் நிறத்தைக் காண்பிக்க அதற்கு தருணம் கிடைத்த மாத்திரத்தில், அது காண்பித்து விட்டது.

208. ஆனால் அவன் புறாவை வெளியே அனுப்பினபோது, அது புறப் பட்டுச் சென்ற போது, வ்யூ, அதனால் சகிக்க முடியவில்லை. அது எங்கும் செல்ல முடியவில்லை, தன் பாதங்களை இளைப் பாறச் செய்ய அதற்கு இடம் எங்குமில்லை, எனவே அது பேழைக்கு திரும்பி வந்தது. அப்படித்தான் அது உள்ளது.

209. சில நேரங்களில், நீங்கள் என்ன செய்வீர்கள் என்று காண சிறிது நேரத்துக்கு நீங்கள் அவிழ்த்து விடப்பட்டிருக்கலாம். ஆனால் உங்களுக்கு புறாவின் சுபாவம் இருக்குமானால், உங்களால் காகத்தின் ஆகாரத்தை தின்ன முடியாது. அவ்வளவு தான், அது ஜீரணமாகாது; அவ்வளவுதான்.

210. நீங்கள் எங்கே செல்வீர்கள், நீங்கள் என்ன செய்வீர்கள்? நீங்கள் கிறிஸ்தவனாக இல்லாமல் போயிருந்தால் என்ன செய்திருப்பீர்கள் என்று எனக்குச் சொல்லுங்கள்! நான் கிறிஸ்தவனாக இல்லாமலிருந்தால், இன்று காலை நான் என்ன செய்திருப்பேன் என்று எனக்குச் சொல்லுங்கள்! என் தாயார் நினைவிழந்த நிலையில் மருத்துவமனையில் படுத்திருக் கும் போது, இந்த பிரசங்க பீடத்தில் நான் நின்று கொண்டு என்னால் பிரசங்கிக்க முடிந்து, நான் செல்லும் வழியில் சென்று, அதற்கு அதிக கவனம் நான் செலுத்தாதது போல் காணப்படுகிறதற்கு காரணமென்ன? ஏனெனில் என் தாயார் இரட்சிக்கப்பட் டிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். பாருங்கள்? அவர்கள் இரசிக்கப்பட்டிருக் கிறார்கள் என்று நானறிவேன். நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன்; நான் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும்

காத்துக் கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்திருக்கிறேன்.

211. தாயார் இப்பொழுது என்ன செய்வார்கள்? ஒருக்கால் அவர்களுக்கு வாழ்நாள் பூராவும், "என்றாவது ஒரு நாள் நான் கிறிஸ்தவளாகி விடுவேன்' என்னும் நல்லெண்ணம் இருந்திருக்கக் கூடும். ஆனால் இப்பொழுது அவர்கள் நினை விழந்த நிலையில் படுத்துக் கொண்டிருக்கும்போது, அவர்களால் எப்படி கிறிஸ்தவளாகியிருக்க முடியும்? அவர்கள் இப்பொழுது எப்படி கிறிஸ்தவளாகியிருக்க முடியும்? அவர்களுடைய பிள்ளைகள் என்ன செய்வார்கள்?

212. அன்று நாங்கள் அவர்களுக்கு க்ளுகோஸ் செலுத்த அவர்களைக் கொண்டு போன போது ... அவர்களுடைய உடலில் உள்ள ஒன்றே ஒன்று க்ளுகோஸ் மட்டுமே. அவர்களால் விழுங்கமுடியவில்லை அவர்களுக்கு கைகால் முடங்கி

விட்டது. அவர்கள், "பில்லி, இந்த ஒன்றை நீ அறிய வேண்டுமென்று விரும்புகிறேன்' என்றார்கள். அவர்கள் என்னைக் குறித்தும், அங்கு நின்று கொண்டிருந்த டீலோரா ஸைக் குறித்தும், அவர்களுடைய பிள்ளை களைக் குறித்தும், என் சகோதரர்களில் சிலர் குடிப்பதைக் குறித்தும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

நான், "அவர்கள் உங்கள் இருதயத்தை உடைத்து விட்டார்கள்" என்றேன்.

அவர்கள், "ஆனால் பில்லி, இவை யனைத்தும் ஒரு தாயாரின் வாழ்க்கை சக்கரத்தில் சுழலும் காரியங்களே. ஆனால் நான் இரட்சிக்கப்பட்டு விட்டேன், நான் போக ஆயத்தமாயிருக்கிறேன்" என்றார்கள்.

213. நான், "அம்மா, நீங்கள் ஜெபர் ஸன்வில் தொடங்கி ஊடிகா வரைக்கும் விஸ்தாரமுள்ள ஒரு அரண்மனையை எங்களுக்கு விட்டு சென்றாலும்.. நீங்கள்

போய் விட்ட பிறகு நாங்கள் சண்டை போட்டுக் கொள்ள (அப்படித்தான் அது நடக்கும்) ஒரு கோடி டாலர்களை வைத்து விட்டுச் சென்றாலும், நீங்கள் எங்களுக்கு வைத்துப் போகும் மிகப் பெரிய பொக்கிஷத்துக்கு அது ஈடாகாது. நதிக்கு அப்பாலுள்ள அந்த தேசத்தில் நாங்கள் உங்களை மறுபடியும் காண்போம் என்னும் உறுதியை எங்களுக்கு நீங்கள் விட்டுச் செல்கிறீர்கள்" என்றேன். அது உண்மை . பாருங்கள்?

214. நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள், கிறிஸ்து நம்மை இரட்சித்திருக்கிறார் என்பதற்காக நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்... நாம் பின் மாற்றமடையக் கூடும்; நாம் தவறு செய்யக் கூடும்; நம்மனைவருக்கும் ஏற்றத்தாழ்வு உண்டு; ஆனால் உங்கள் ஆத்துமாவில், நீங்கள் ஏதாவதொன்றைச் செய்யும்போது, உடனே உங்களில் ஏதோ தவறு ஏற்பட்டு விடுகிறது; அதை நீங்கள் அறிந்து

கொள்வீர்கள். அது தான் குதித்து ஓடி விடுவதற்கான நேரம். அதிலிருந்து விலகிச் செல்லுங்கள்.

215. இன்று நீங்கள் இங்கிருந்து வெளியே செல்லுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். யாராவது ஒருவர் உங்க ளிடத்தில் வந்து, "நீ உருளும் பரிசுத்தரில் ஒருவன் என்று அவர்கள் என்னிடம் சொல்லுகிறார்கள்' என்று சொல்லுகிறார் என்று வைத்துக் கொள்வோம். சாத்தான் உடனே உங்களிடம், "அவனை கன்னத்தில் அறை என்கிறான்.

216. "நான் உருளும் பரிசுத்தனா என்பது எனக்குத் தெரியாது. நான் ஒரு கிறிஸ்தவன்" என்று சொல்லுங்கள். பாருங் கள்? தீமையை நன்மையினால் சந்தியுங் கள். இதை ஞாபகம் கொள்ளுங்கள், நீங்கள் தீமையை நன்மையினால் சந்திக்கும்போது, தீமை நன்மைக்கு

முன்பாக நிற்க முடியாது. அதனால் முடியாது.

217. நான் ஒரு மிஷனரி, நான் உலகம் முழுவதும் சென்று, பலவித தீமைகளை கண்டிருக்கிறேன் - பலவித மந்திரவாதிகள், கொள்கைகள், பலவித பிசாசு வழிபாடு, ஓ, நான் நினைத்துப் பார்க்கக் கூடிய எல்லாமே. தீமையை நன்மை எப்பொழு தும் வெல்கிறது என்பதை நான் கண்டிருக்கிறேன். –

218. கவனியுங்கள், இரவு எவ்வளவு இருளாயிருந்தாலும் எனக்குக் கவலை யில்லை; உங்களால் உணர முடிகின்ற அளவுக்கு அது இருளாயிருக்கக் கூடும். உங்கள் கைகளை நீங்கள் உயர்த்தி எந்த விதமான நிழலையும் காண முடியாமல் இருக்கக் கூடும். ஆனால் மிகச் சிறிய வெளிச்சம் கூட அந்த இருளை அம்பலப் படுத்தி விடும். நிச்சயமாக, அப்படித்தான் மரணத்தின் சமுகத்தில் ஜீவன் செய்கிறது.

அப்படித்தான் தீமையின் சமுகத்தில் நன்மை செய்கிறது. அப்படித்தான் சந்தேகத்தின் சமுகத்தில் விசுவாசம் செய்கிறது, அது அதை சிதறடித்து விடுகிறது.

219. சூரியன் பிரகாசிக்கும்போது - ஆசீர்வாதம் பிரகாசிக்கும் போது - இரவு எவ்விதம் இங்கு தங்கியிருக்க முடியும்? இரவு எங்கு சென்று விடுகிறது? அது இருக்க முடியாது. இரவுக்கு என்ன நேர்ந்தது? பன்னிரண்டு மணி நேரத்துக்கு முன்பாக இந்த கூடாரத்தில் இருந்த இருள் இப்பொழுது எங்கே? இந்த சுவர்களுக்குள் பரந்து கிடந்த அந்த இருள் இப்பொழுது எங்கே? அது இப்பொழுது இல்லை, அது மறைந்து விட்டது. ஏன்? வெளிச்சம் உள்ளே வந்தது. வெளிச்சம் உள்ளே வரும்போது, இருள் போகத்தான் வேண்டும். ஆம், ஐயா!

220. இரவிலே திரியும் கரப்பான் பூச்சிகள், வண்டுகள் போன்றவைகளை

எடுத்துக் கொள்ளுங்கள். சூரியன் எழும்பினால் அல்லது வெளிச்சம் பிரகாசிக்கத் தொடங்கினால், அவை எவ்விதம் இருளுக்கு ஓடி வருகின்றன என்பதை கவனியுங்கள். சுவிசேஷமும் அதை தான் செய்கிறது. அது பிரகாசிக்கும்போது, உங்களை "உருளும் பரிசுத்தர் என்று அழைக்க விரும்புகிறவர்களுக்கு என்ன நேரிடுகிறது? உங்களை கேலி செய்பவர்களுக்கு என்ன நேரிடுகிறது? வெளிச்சம் பிரகாசிக்கத் தொடங்கினவுடனே, அவர்கள் மெல்ல இருளுக்குச் சென்று விடுகின்றனர். ஏனெனில் அவர்கள் இருளின் பிள்ளைகள். ஆனால் வெளிச்சத்தின் பிள்ளைகளோ வெளிச்சத்தில் நடக்கின்றனர்.

221. நாமோ தேவனுடைய கிருபையினால் வெளிச்சத்தின் பிள்ளைகளாயிருக்கிறோம். எனவே வெளிச்சம் பிரகாசித்தபோது, நாம தேவனுக்கு நன்றி செலுத்தி, திறந்த கண்களுடன் நடந்து சென்று,

மாம்சக் கண்கள் காணக்கூடாதவைகளை நாம் பார்த்தோம். ஏன்? விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப் படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. ஆமென்! அது எனக்குப் பிரியம்.



எதுவுமே எதேச்சையாக நடப்பதில்லை. எல்லாமே தேவனுடைய தீர்மானத்தின்படி நடக்கிறது. என்ன நடந்தாலும், சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## ரோமர் 8:28

**அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.**



**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

---

## செய்தி: 62-05-13E அழுத்தத்தை வெளியேற்றுதல்

---

145. ஒரு நாள் கடற்கரை ஓரத்தில் சார்லஸ் வெஸ்லி தனிமையில் இருந்த போது ... அவருக்கு ஒரு சிறு வீடு இருந்தது; அவர் படித்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு பாடலை எழுத தேவன் அவரை ஏவிக் கொண்டிருந்தார். அவருக்கு அந்த பாடலைத் தொடங்க எதுவும் கிடைக்க வில்லை. அவர் ஏதாவதொன்றைத் தொடங்கும் போது ஊக்கம் அவரை விட்டுச் சென்று விடும். எனவே அவர் கடற்கரையில் நடந்து சென்று, அலைகள் மோதுவதைக் கண்டால் ஊக்கம் மேலிடும் என்று எண்ணினார். திடீரென்று புயல்

உண்டானது. எதுவுமே எதேச்சையாக நடப்பதில்லை. எல்லாமே தேவனுடைய தீர்மானத்தின்படி நடக்கிறது. என்ன நடந்தாலும், சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்.

146. அவர் தன் சிறு வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினார். அப்பொழுது காற்று பலமாக அடித்தது. "ஓ, நான் வீடு சேருவதற்கு முன்பு இந்த பலத்த காற்று என்னைக் கடற்கரையிலிருந்து தூக்கி சென்று விடுமே" என்று நினைத்து. 'கோட்டை இழுத்து மூடிக் கொண்டு ஓடத் தொடங்கினார். அப்பொழுது ஏதோ ஒன்று பறந்து அவருடைய மார்பை அடைந்தது. அவர் பார்த்த போது, அது அடைக்கலம் தேடி வந்த ஒரு அடைக்கலான் குருவி. புயல் அடித்து ஓய்ந்து வெயில் வரும் வரைக்கும் அவர் அதை தன் மார்பில் அணைத்துக் கொண்டார். அதன் பிறகு அவர் அதை தன் விரலின் மேல்

நிறுத்தினார். அது பறந்து சென்றது. அப்பொழுது அவர் ஊக்கம் மேலிட்டு,

எனக்காக பிளவுண்ட காலங்கள் தோறும் உள்ள

கன்மலையே என்னை நான் உம்மில் மறைத்துக் கொள்வேனாக

என்னும் பாடலை எழுதினார்.

147. ஓ, அது எனக்குப் பிடிக்கும். காலங்கள் தோறும் உள்ள கன்மலை, களைப்புற்ற தேசத்தில் உள்ள அந்த கன்மலை, புயலின் போது புகலிடம். களைப்புற்ற தேசத்தில் உள்ள கன்மலையே, என்னை மறைத்துக் கொள்வீராக, ஓ, எனக்காகப் பிளவுண்ட காலங்கள் தோறும் உள்ள கன்மலையே.

148. பரிசுத்த ஆவியின் ஏவுதலால் அந்த கவிஞர்கள் பாடல்களை எழுதி வைத்து, அவைகளை இப்பொழுது நாம் ரசித்துக் கொண்டிருக்கிறோம்... நீங்கள், இந்த பாடல்கள் பரிசுத்த ஆவியின்

ஏவுதலினாலா எழுதப்பட்டன?" என்று கேட்கலாம். இயேசு இவ்வுலகில் இருந்த போது, "சங்கீதங்களில் எழுதியுள்ளனவே தாவீது இன்னின்னதை கூறினான் என்று?" என்றார். நிச்சயம் அவை பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் எழுதப்பட்ட வையே. பிரசங்கம் செய்வது அல்லது வேறெதாவதைப் போன்று இவையும் பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் எழுதப் பட்டவை.

149. எனக்கு ஒரு புகலிடம் உள்ளதற் காக எனக்கு மிக்க மகிழ்ச்சி. வேறெந்த புகலிடமும் எனக்குக் கிடையாது.

என் நம்பிக்கை இயேசுவின் இரத்தத் திலும் நீதியிலுமேயன்றி வேறெதன் மேலும் கட்டப்படவில்லை சுற்றிலும் என் ஆத்துமா தளர்ந்து போகும்போது அவரே என் நம்பிக்கையும் நான் தங்குமிடமாகவும் உள்ளார் கிறிஸ்து என்னும் திடமான பாறையின் மேல் நிற்கிறேன் மற்றெல்லா

~ 7 ~

# நிலமும் அமிழ்ந்து போகும் மணலே (அது எதுவானாலும்)



அது என்னவாயிருப்பினும், அது எப்படி கிரியை செய்தாலும், நமது நன்மைக்கு ஏதுவாகவே அது நடக்க வேண்டுமென்று நாம் அறிந்திருக்கிறோம்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# ரோமர் 8:28

**அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.**



இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

---

## செய்தி: 64-07-05 சிறந்த வேலைப்பாடு

---

5 நாம் தேவனை விசுவாசித்தவர்களாய், தேவன் எல்லாவற்றையும் சரியாகவே செய்வார் என்னும் விசுவாசம் கொண்டவர்களாய், இன்று காலை நாம் தேவனுடைய ஆராதனையில் பங்கு கொண்டிருக்கிறோம்.

**அது என்னவாயிருப்பினும், அது எப்படி கிரியை செய்தாலும், நமது நன்மைக்கு ஏதுவாகவே அது நடக்க வேண்டுமென்று நாம் அறிந்திருக்கிறோம்.**

**ஏனெனில் அவர் அவ்விதம் வாக்களித்துள்ளார். அது அப்படியே நடக்க வேண்டும்.**

**சில நேரங்களில் நம்மால் அதை புரிந்து கொள்ள முடியவில்லை. அது மிகவும் சிக்கலாகி விடுகின்றது. ஆயினும் அது நன்மைக்கு ஏதுவாகவே நடக்குமென்பது உண்மை. ஏனெனில் வேதம் அவ்வாறு உரைக்கின்றது.** வேதாகமம் என்பது எழுத்து வடிவில் நமக்குள்ள தேவனாகும்.

நாம் ஏதாவது ஒன்றின் பேரில் நமது விசுவாசத்தை வைக்க வேண்டியவர்களா யிருக்கிறோம். நம்மில் யாராகிலும் ஒருவர் வாழ்க்கையில் வெற்றி கண்டு கோடீஸ்வர ராக ஆனால்... அதைக் கொண்டு நாம் என்ன செய்யப் போகின்றோம்? எப்படியா கிலும் நம்முடைய வாழ்க்கையின் முடிவுக்கு நாம் வந்துதான் ஆக வேண்டும். அப்பொழுது ஐசுவரியத்தினால் என்ன பயன்? பணம் என்பது மாற்றுப் பண்டம்.

ஆனால் அதை செலுத்தி, ஜீவனை வாங்கிக் கொள்ள முடியாது. ஏனெனில் தேவன் ஒருவரிடமே ஜீவன் உள்ளது.

---



**அங்கே காரியங்கள் காண்பதற்கு, எவ்வளவு மோசமாக இருந்தாலும், அது பொருட்டல்ல! நினைவில் கொள்ளுங்கள், அது உங்களுடைய நன்மைக்காகவே நடந்தாக வேண்டும். அதற்காக, நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## ரோமர் 8:28

**அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.**



**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

---

## செய்தி: 60-03-28 கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?

---

4 இப்பொழுது, இந்த அதிகாரத்தின் முதல் பாகத்தில், ஆபிரகாம் அந்த உஷ்ண மான பகல் வேளையில், தன்னுடைய கூடாரத்தின் வாசலண்டையில் உட்கார்ந் திருக்கிறதை, நாம் பார்க்கிறோம், அது ஒரு மிகவும் உஷ்ணமான், ஒரு பகல் வேளை யாக இருந்திருக்க வேண்டும்.

ஒருவேளை, அங்கே, அந்த மேய்ப்பர் கள் அவனிடத்தில் தாமதமாக வந்து, நிலம் வரண்டு போய், எல்லா புற்களும் காய்ந்து போய்விட்டன என்றும், அதனால், கால் நடைகள் யாவும் மெலிந்து விட்டன

என்றும், மேலும், நீர் வரத்து முழுவதும் இல்லாமல் போய்விட்டன என்றும், அநேக புகார்களை கூறிய வண்ணம் இருந்திருப் பார்கள்.

அந்த நிலத்திலே, அவர்கள் துரவுகளை தோண்டினார்கள், ஆனால், அதில் தண்ணீர் குறைய, குறைய அவர்களும் அதை விடாமல், தொடர்ந்து தோண்டி, தோண்டி முடிவில், அந்த நீரானது சுரக்கும் பாறை வரைக்குமாய், சென்று விட்டார்கள். ஆனா லும், கால்நடைகள் குடிக்க, போதுமான தண்ணீர் இன்னுமாக கிடைக்கவில்லை.

**உங்களுக்கு தெரியுமா? சில நேரங்களில் காரியங்கள், இருள் சூழ்ந்த நிலையில், தவறாக போகும் போது, நாம் இயற்கையாய் அறிந்த வண்ணம், பகலுக்கு முன் ஒரு இருள் இருக்கத்தான் வேண்டும், மேலும், அநேக சமயங்களில், பேரழிவான சம்பவங் கள் நடக்கிறதை நாம் பார்க்கும் போது, விசேஷமாக விசுவாசிகளுக்கு அது நடக்கும்**

**போது, அது, நமது வழியில் வரப்போகிற ஆசீர்வாதத்தை, தடை செய்யும்படிக்கு, சாத்தான் முயற்ச்சிக்கிற காரியம் என்பதை, நாம் நம்முடைய சிந்தையில் கொண்டிருக்க வேண்டும்.**

5 இந்த கதையில், அவ்விதமான காரியங்கள் அதிகமாய் காணப்படுகிறது.

அவர்கள் இருவருக்கும், தாங்கள் ஏதோ தவறு செய்து விட்டோமோ, என்ற உணர்வை கொண்டு வரும்படிக்கு, சாத் தான் அவர்களை சோதிக்க முற்பட்டான்.

மேலும், அவன் ஆபிரகாமுக்கும், சாராளுக்கும், தேவன் அருளப்போகிற அவருடைய வருகையின் சந்திப்பை, (Oncoming visitation) தடை செய்ய முயற்ச் சித்தான்.

**தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர் களுக்கு, சகலமும், நன்மைக்கேதுவாய்**

**நடக்கிறது என்று வேதவாக்கியங்கள் மூலம் நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம்.**

**அங்கே காரியங்கள் காண்பதற்கு, எவ்வளவு மோசமாக இருந்தாலும், அது பொருட்டல்ல ! நினைவில் கொள்ளுங்கள், அது உங்களுடைய நன்மைக்காகவே நடந்தாக வேண்டும். அதற்காக, நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.**

**இந்த நாள் முழுவதும், சாத்தான் என்னை பின்தொடர்ந்து கொண்டிருந் தான். ஆகவே, இந்த பட்டணத்தில், எங்கோ என்னுடைய ஆசீர்வாதம் வைக்கப் பட்டிருக்கிறது, என்று நான் அப்படியே விசுவாசித்தேன்.**

அவன் வழியை அடைத்து, கவர்ந் திழுத்து சோதிக்கும் போது, அவன் என்ன செய்ய முயற்சிக்கிறான்? உங்களுக்கு, அவிசுவாசம் உண்டாகும்படி செய்கிறான், என்பதை நான் அறிவேன்.

**தேவனை அவிசுவாசிப்பதே, நீங்கள் செய்கிற மிக மோசமான காரியம், நீங்கள் சிறிதளவு பயந்து, ஒரு வேளை, இதை நான் செய்திருக்க கூடாது, அதை நான் செய் திருக்க கூடாது, என்று கூறின மாத்திரத் தில், சரியாக, அப்பொழுதே சாத்தான் உங்க ளுக்காக ஜெயங்கொள்ளப்பட்ட ஆசீர் வாதத்தை, எடுத்துக் கொண்டு விடுகிறான்.**

**சாத்தான், அவ்விதமாக உங்களை நினைக்க செய்யுமட்டும், உங்களால் அதை அடைய முடியாது.**

6 மேலும், ஒருவேளை, அவ்விதமாக, கவர்ந்திழுக்கும் சோதனைக்கு, நாம் செவி கொடுத்து, அவைகளுக்கு, நம்முடைய கவனத்தை செலுத்துவோமாகில், அப்போது, அவருடைய ஆசீர்வாதத்தை தவறவிட்டவர்களாய் காணப்படுவோம்.

எனவே அவன் கர்த்தருடைய சித்தத்துக்கு அப்பாற்பட்டவனாக இல்லை. “தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு தேவன் சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக செய்கிறார்” (ரோமர் 8:28) என்னும் வசனத்திற்கேற்ப, இவனுடைய செயல் அமைந்திருந்தது. அது உண்மை.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## ரோமர் 8:28

**அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.**



**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

## செய்தி: 63-11-13 இக்காலத்தின் அடையாளம்

118. இப்பொழுது யோனாவுக்கு வருவோம். அநேகர், "அவன் அவிசுவாசி" என்று கூறுவதாக நான் ஏற்கனவே கூறினேன். இல்லை, அவன் அவிசுவாசி அல்ல.

119 அவன் நினிவேக்குச் செல்ல வேண்டியவனாயிருந்தான். அது முற்றிலும் உண்மை. ஏனெனில் அது பாவம் நிறைந்த ஒரு பெரிய பட்டினமா யிருந்தது. ஒருக்கால் அதன் ஜனத்தொகை ஐந்து லட்சம் இருந்திருக்கும். அவர்கள் மிகவும் பொல்லாதவர்களாயிருந்தனர். அது சிறந்த வாணிபப்பட்டினம். அவர்க

ளுடைய முக்கியத் தொழில் மீன் பிடித்தல் என்று நான் படித்திருக்கிறேன். அவன் அங்கு அனுப்பப்பட்டான். ஆனால் அவன் வேறு கப்பல் ஏறி தர்ஷீசுக்குப் புறப்பட்டான்.

120. அவன் அப்படி செய்ய நினைக்க வில்லை என்று அநேகர் கூற முயல்கின் றனர். அது அனைத்தும் தேவனால் திட்டமிடப்பட்டது. நான் ஒரு சிறு கதையைப் படித்துக் கொண்டிருந்தேன். யோனா செய்தது நியாயமென நான் இப்பொழுது கூறுவதற்கு அது ஆதாரமாய் அமைந்துள்ளது.

121. யோனா தவறான கப்பலில் ஏறின போது, அவன் தவறான வழியில் சென்று, அதன் விளைவாக தொல்லைக்கு ஆளா னான். காற்று அப்பொழுது பலமாக அடிக்கத் தொடங்கினது. அலைகள் கொந்த ளித்து பயங்கரமாக இரைச்சலிட்டன. கப்பல் மூழ்கி விடுமென்று எல்லோரும்

கருதினர். ஆனால் யோனாவோ அயர்ந்த நித்திரையிலிருந்தான். அவர்கள். ''நீ நித்திரை பண்ணுகிறது என்ன? எழுந் திருந்து உன் தேவனை நோக்கி வேண்டிக் கொள்'' என்றனர்.

122. யோனா தவறு செய்து விட்டதாக அறிக்கையிட்டான். அவன், "என் கால் களையும் கைகளையும் கட்டி சமுத்தி ரத்திலே போட்டு விடுங்கள். அப்பொழுது சமுத்திரம் உங்களுக்கு அமர்ந்திருக்கும்'' என்றான். அவர்கள் அப்படியே செய்தனர்.

கர்த்தர் ஒரு பெரிய மீனை ஆயத்தம் பண்ணியிருந்தார்.

123. அண்மையில் ஒரு விஞ்ஞானி கென்டக்கியிலுள்ள லூயிவில் என்னு மிடத்தில் இவ்விதம் கூறக் கேட்டேன். நான் ஜெபர்ஸன் வில்லில் வசித்தேன். அது சிறிது தூரம் தான். அந்த விஞ்ஞானி திமிங்கிலத்தின் எலும்புக் கூட்டை வைத்து சொற்பொழிவாற்றி, திமிங்கிலத்திற்கு

எத்தனை - பற்கள் உண்டென்றும். இன்னும் அநேக காரியங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். முடிவில் அவர், "யோனாவைக் குறித்து வேதத்தில் கூறப் பட்ட வரலாறு உண்மையல்ல'' என்றார்.

124. அதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நான் சற்று அருகில் சென்று, அவர் மேலும் என்ன கூறுகிறார் என்று கேட்க விழைந்தேன்.

125. அவர், "ஒரு திமிங்கிலம் யோனாவை விழுங்கினதாக வேத வரலாறு கூறுகின்றதல்லவா? நீங்கள் கவனிக்க விரும்புகிறேன். இந்த திமிங்கிலத்தின் தொண்டையின் வழியாக 'பேஸ் பந்து' (Base ball) கூட நுழைய முடியாது என்னும் போது, ஒரு மனிதன் எப்படி நுழைந்திருக்க முடியுமென்று யோசித்து பாருங்கள். அது தவறு'' என்றார்,

126. அந்த நாத்திகன் இத்தகைய காரியங்களைக் கூறுவதை என்னால்

பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நான், "ஐயா, என்னை மன்னிக்க வேண்டுகிறேன். நீங்கள் எப்பொழுதாகிலும் வேதத்தைப் படித்ததுண்டா ?'' என்று கேட்டேன்.

அவர், 'நிச்சயமாக'' என்று பதிலுரைத்தார்.

127. "அப்படியிருந்தும் இவ்வாறு கூறுகின்றீரே! அது திமிங்கிலம் என்று கர்த்தர் கூறவில்லை, அது 'மீன்' என்று தான் கூறினார்.'' என்றேன்.

அவர், "அது திமிங்கிலமாகத்தான் இருந்திருக்க வேண்டும்'' என்றார்.

128. நான், ''சரி, அது திமிங்கிலம் என்றே வைத்துக் கொள்வோம். ஆனால் அது விசேஷமாக ஆயத்தம் பண்ணப் பட்டது. கர்த்தர் அவனுக்காக ஒரு மீனை ஆயத்தம் பண்ணி னார். இது விசேஷமான ஒன்று. இந்த மோட்டார் வாகனம் அதன் தொண்டையில் புகக் கூடிய அளவுக்கு அவரால் ஒரு மீனை ஆயத்தம் பண்ண முடியும். அவர் தேவன், பாருங்கள்.

எனவே வேதத்தில் கூறப்பட்டது உண்மையே. கர்த்தர் யோனா வுக்காக ஒரு மீனை ஆயத்தப் படுத்தினார். அது விசேஷ மான மீன், எனவே அது யோனவை விழுங்கினது'' என்றேன்.

129. யோனா இந்த விசேஷமான மீனின் வயிற்றில் இருந்தான். அவன் கைகளும் கால்களும் கட்டப்பட்டிருந்தன. அவன் எந்நிலையில் இருந்திருப்பான் என்று உங்களால் கற்பனை செய்ய முடியும். இந்த மீன், மற்றெல்லா மீன்களையும் போல், தன் ஆகாரத்திற்காக நீர் மட்டத்துக்கு வந்து, ஆகாரம் கிடைத் தவுடன் கடலின் அடியில் சென்றிருக்கும்,

130. உங்கள் பொன் மீன்களுக்கு ஆகாரம் போட்டு கவனித்துப் பாருங்கள். அதன் வயிறு நிரம்பினவுடனே, அது அடிமட்டத்துக்கு - சென்று, தன் சிறு செதில்களை விரித்து இளைப்பாறுகிறது.

ஏனெனில் அதன் ஆகாரத்தை அது பெற்றுக் கொண்டு விட்டது.

131. இந்த மீன் யோனா தீர்க்கதரிசியை விழுங்கினவுடனே கடலின் அடியில் சென்றிருக்க வேண்டும். அது உண்மை யாக அப்படி சென்றதா என்று எனக்குத் தெரியாது. அது அடியில் சென்றிருக்கலாம் என்று ஊகிக்கிறேன். இந்த மனிதன் அங்கிருக் கிறான்.

132. நாம் எப்பொழுதுமே நமது அறிகுறிகளை (symptoms) மாத்திரமே யோசித்துக் கொண்டிருக்க விரும்புகி றோம், அல்லது சாத்தான் அவைகளை நமக்கு எடுத்துக் காண்பிக்க நாம் அனுமதிக்கிறோம். அவன், 'நேற்றை விட இன்று நீ சுகமாக இல்லையே! நீ சுகமாக வில்லை'' என்பான். நீங்கள் அறிகுறி களைக் காணவேண்டாம்.

133. யாருக்காவது அறிகுறிகள் காணப்பட்டால், அது யோனாவுக்கு தான்.

பாருங்கள்? அவன் எல்லா பக்கங்களிலும் மீனின் வயிற்றறையே கண்டான். பாருங் கள்? ஆனால் அவன் என்ன சொன்னான் தெரியுமா? 'இவை பொய்யான மாயை'' என்றான் (யோனா 3:8.). அவன், ''அதையே பார்த்துக் கொண்டிருக்கப் போகிறேன்'' என்று சொல்லவில்லை. அவன். "இன்னமும் உம்முடைய பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன்'' என்றான். (யோனா 2:4).

134. ஏனெனில் சாலொமோன் ஜெபம் பண்ணி அந்த ஆலயத்தை பிரதிஷ்டை செய்தபோது, ''உமது ஜனங்கள் வியாகுல மடைந்து, இந்த ஆலயத்தை நோக்கி விண்ணப்பம் பண்ணினால், பரலோகத்தி லிருந்து அதைக் கேட்டருளும்'' என்றான் (2 நாளா, 5:29-39). யோனாவுக்கு சாலொமோனின் ஜெபத்தில் நம்பிக்கை யிருந்தது. சாலொமோன் நம்மைப் போல இவ்வுலகைச் சேர்ந்த சாதாரண மனிதன். சிறிது காலம் கழித்து அவன் பின்வாங்கிப்

போனான். ஸ்திரீகள் அவனை தேவனை விட்டு இழுத்துச் சென்றனர். ஆயினும் அவன் ஜெபத்தை தேவன் கேட்டார். யோனா, தான் இருந்த சூழ்நிலையிலும் கூட விசுவாசத்தைப் பெற்றிருக்க முடிந்தது.

135. அப்படியிருக்க, மனிதனால் கட்டப்பட்ட ஒரு ஆயலத்தை நோக்கிப் பார்க்கவேண்டிய அவசியமிராமல், பரலோகத்தையே நோக்கிப் பார்க்க வேண்டிய நமக்கு விசுவாசம் இன்னும் எவ்வளவு அதிசுமாக இருக்கவேண்டும்? பரலோகத்தில் தேவனுடைய குமாரன் தமது மகிமையின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து என்றென்றும் ஜீவிக்கிறவராய், தமது சொந்த இரத்தத்தின் மூலம் நமக்காக வேண்டுதல் செய்து கொண்டிருக்கிறாரே!

136. நமக்கு யாருக்குமே யோனாவுக் கிருந்த அறிகுறிகள் கிடையாது. ஜனங்கள் தேவனுடைய சமுகத்தில் எல்லா

சமயங்களிலும் சுகம் பெறுவதை நாம் கண்டிருக்கிறோம். நாம் அறிகுறிகளை நோக்கக் கூடாது. அவை பொய்யான மாயை. வாக்குத்தத்தம் பண்ணின தேவனை நோக்கிப் பாருங்கள்.

137. அந்த தீர்க்கதரிசிக்கு தேவன் எப்படி பிராணவாயு கிடைக்கும்படி செய்தார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவன் இரவும் பகலும் மூன்று நாள் உயிர்வாழ்ந்தான் என்று வேதம் கூறுகிறது. தர்ஷீசு பட்டினம் நினிவே யிலிருந்து கடல் வழியாக எவ்வளவு தூரம் என்றும் எனக்குத் தெரியாது. ஆனால், வேதத்தின்படி யோனா இரவும் பகலும் மூன்று நாள் மீனின் வயிற்றில் உயிரோ டிருந்தான், அவன் அவரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான்,

"ஓ, அது கூடாத காரியம்" எனலாம்.

138. லாசரு மரித்து நான்கு நாட்களான பின்பு, அவர் அவனை உயிரோடு

வரும்படி அழைத்ததைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? அது போன்று, நாம் மரித்து பத்தாயிரம் ஆண்டுகள் கழிந்திருந் தாலும், அவர் ஒரு நாளில் நம்மையும் அழைப்பார். எத்தனை ஆண்டுகள் கடந்தா லும், அது அவருக்கு ஒன்றுமில்லை. பாருங்கள், அவர் தேவனாயிருக்கிறார்.

139. அவன் நினிவேக்கு வருகிறான் என்று நாம் காண்கிறோம். ஒரு மீன் தண்ணீ ரில் நீந்தி வருகிறது, அவனுக்கு கடலின் அடியில் நினிவே வரை 'வாடகை கார்' சவாரி கிடைக்கிறது. அப்பொழுது பகல் நேரமாக இருந்திருக்கும்.

140. நினிவே ஜனங்கள் மீன்பிடிப் பவர்கள். அவர்கள் வலையை இழுத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் மீன் விற்று வாணிபம் செய்பவர்கள். அவர்கள் அஞ்ஞானிகள். அவர்கள் விக்கிரகங்களை வணங்கினர், அவர்களுடைய தெய்வங் களில் ஒன்று ....

141. இங்குள்ள அமெரிக்க இந்தியர்களுக்கு சாம்பல் நிறக்கரடி தெய்வமாயிருந்தது போல (உர்சஸ்?). இந்த அஞ்ஞானி இந்தியர்கள் கிறிஸ்தவர்களாகும் முன்பு இதை தான் வணங்கிவந்தனர். அது சக்திக்கு தெய்வமாயிருந்தது.

142. நினிவேயில் திமிங்கிலம் கடல் தெய்வமாக வழிபட்டு வந்ததாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஏனெனில் அது கடலின் எஜமானாயிருந்தது. அது எதை வேண்டுமானாலும் விழுங்கக்கூடும். ஏறக்குறைய பகல் வேளையில், அவர்களுடைய தெய்வம் தண்ணீரை விட்டு வெளிவந்து, தன் வாயைத் திறக்கிறது. தீர்க்கதரிசி அதை விட்டு வெளிநடந்து கரையை அடைகிறான். அவன் கூறினதை அவர்கள் நம்பினதில் வியப்பொன்றுமில்லை. பாருங்கள்? அவர்கள் உறுதியாக விசுவாசிம் வைத்தனர். ஏனெனில் செய்தியையளித்த தீர்க்கதரிசி அவர்களுடைய தெய்வத்தின் வாயிலிருந்து

புறப்பட்டு வந்து, 'மனந்திரும்புங்கள், இல்லாவிட்டால் நினிவே அழிக்கப்படும்'' என்று அறை கூவினான். பாருங்கள்?

143. எனவே அவன் கர்த்தருடைய சித்தத்துக்கு அப்பாற்பட்டவனாக இல்லை. "தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு தேவன் சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக செய்கிறார்'' (ரோமர் 8:28) என்னும் வசனத்திற்கேற்ப, இவனுடைய செயல் அமைந்திருந்தது. அது உண்மை. ''அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கு,'' இயேசு அவனைக் குறிப்பிட்டார்.

**அது வியாதியாயிருந்தாலும் சரி, சிறையாயிருந்தாலும், மரணம், துயரம் எதுவாயிருப்பினும், அவரில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும். அவர் அங்ஙனம் வாக்களித்துள்ளதால், அது அவ்வாறே நிறைவேற வேண்டும்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# ரோமர் 8:28

**அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.**



**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

---

## செய்தி: 64-07-05 சிறந்த வேலைப்பாடு

---

58. அதன் பின்பு யோசேப்பில் நாம் காண்கிறோம். யோசேப்பு விசித்திரமாகப் பிறந்த ஒரு பையன். அவன் தான் எல்லா ரிலும் இளையவன். சிறந்த வேலைப்பாடா கிய சிற்பம் கட்டப்படுவதற்கென உண்டாக் கப்பட்ட அஸ்திபாரத்தின் மேல் பாகம் அவன். அது விசுவாசத்தில் தொடங்கி, அன்பு, கிருபை வழியாய் வந்து, பரிபூர ணத்தையடைகின்றது. அவ்வாறே அது சிற்பத்தின் காலில் தொடங்கி, கிறிஸ்துவின் பரிபூரணமடைகின்றது.

அவர் எவ்வாறு யோசேப்பில் முன்னடை யாளமாக இருந்தார் என்பதைக் கவனியுங் கள். யோசேப்பு தான் அஸ்திபாரத்தின் மேல் பாகம். அவர்கள் அனைவரிலும் அவன் பரிபூரணமானவன். சட்டப்படி விவாகம் செய்த ஸ்திரிக்கு - யாக்கோபின் மனைவிக்கு - யோசேப்பு பிறந்தான். அவன் பிறந்தபோது, அவனுடைய பிதா அவனை சிநேகித்தார். ஆனால் அவனு டைய சகோதரரோ அவனை முகாந்தர மின்றிப் பகைத்தனர். அவனை ஏன் அவர்கள் பகைத்தனர்? ஏனெனில் அவன் வார்த்தையாயிருந்தான். அஸ்திபாரமே என்னவென்று பார்த்தீர்களா? அஸ்திபாரத் தின் மேல் பாகம் எப்படி வருகிறது என்று பாருங்கள். சரீரத்தின் தலையும் எப்படி அமைகிறது என்று கவனியுங்கள். மண வாட்டியின் தலை வருவதைக் கவனியுங் கள். பார்த்தீர்களா? யோசேப்பு வார்த்தை யாயிருந்தான். அவன் தரிசனம் காண்கிறவ

னாயிருந்தபடியால், அவனுடைய சகோதரர்கள் அவனைப் பகைத்தனர். அவன் காரியங்களை முன்னறிந்து, அவர்களிடம் முன்னுரைத்தான். அவன் கூறினவை நிறைவேறின. அது எவ்வளவு காலதாமதமானாலும், அவை அப்படியே நிறைவேறின. அவன் ஆவிக்குரியவனாயிருந்தபடியால், அவனுடைய சகோதரர்கள் அவனைப் புறம்பாக்கிப் போட்டனர். உண்மையில் அவர்கள் அவனை நேசித்திருக்க வேண்டும். ஆனால் அவன் தீர்க்கதரிசியாயும் ஆவிக்குரியவனாயுமிருந்தபடியால், அவர்கள் அவனைப் பகைத்தனர்.

59. கவனியுங்கள், அவன் ஏறக்குறைய முப்பது வெள்ளிக் காசுக்கு விற்கப்பட்டு, குழியிலே போடப்பட்டு, மரித்துப் போனான் என்று கருதப்பட்டான். அவனோ குழியிலிருந்து வெளியே எடுக்கப்பட்டான். சிறையில் அவன் சோதனை நேரத்தை அனுபவித்துக் கொண்டிருந்த

போது, அங்கு பானபாத்திரக்காரனும் சுயம் பாகியும் இருந்தனர். பானபாத்திரக்காரன் இரட்சிக்கப்பட்டான், ஆனால் சுயம் பாகியோ கைவிடப்பட்டான் என்பதை நாம் அறிவோம். அவ்வாறே கிறிஸ்துவின் சிறையாகிய சிலுவையிலும் ஒருவன் இரட்சிக்கப்பட்டான். மற்றவன் கைவிடப் பட்டான் - இரு கள்ளர்கள், இரு குற்றவாளிகள்.

அவன் சிறையிலிருந்து எடுக்கப்பட்டு பார்வோனின் வலது பாரிசத்தை அடை கிறான். யாரும் பார்வோனிடம் பேச முடியாது. யோசேப்பின் மூலமாகவே பேச வேண்டும். யோசேப்பு பார்வோனின் சிங்காசனத்தை விட்டு வெளியே வந்த போது, எகிப்து முழுவதிலும் எக்காளம் தொனித்து, “எல்லோரும் முழங்காற்படி யுங்கள், யோசேப்பு வருகிறார்” என்று அறிவித்தது!.

60. இயேசுவுக்கும் அவ்வாறே நிகழும். அவரும் எவ்வளவாய் பிதாவினால் சிநேகிக்கப்பட்டு, தமது ஸ்தாபன சகோதரர்களால் முகாந்தரமின்றி பகைக்கப்பட்டார்! அவர் சரியாக முப்பது வெள்ளிக் காசுக்கு விற்கப்பட்டார். அவர் ஒரேயடியாக மரித்துவிட்டாரென்று எண்ணி அவரைக் குழியில் (கல்லறையில் தள்ளினார்கள்). சிலுவையில் ஒருவன் கைவிடப்பட்டான். மற்றவன் இரட்சிக்கப்பட்டான். அவர் சிலுவையிலிருந்து உயர்த்தப்பட்டு இராஜ கெம்பீரத்தில், அவரில் பிரதிபலித்த அந்த மகத்தான ஆவியாயிருக்கிற தேவனின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். இயேசுவின் மூலமேயன்றி எவரும் தேவனிடத்தில் பேச முடியாது. யோசித்துப் பாருங்கள்! அவர் சிங்காசனத்தை விட்டுப் புறப்பட்டு வரும்போது, எக்காளம் தொனிக்கும். அப்பொழுது முழங்கால் யாவும்

முடங்கும், நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்...

யோசேப்பு செழிப்பின் குமாரனாயிருந்தான் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். அவன் செய்த அனைத்தும் செழித்தோங்கின. அது சிறையானாலும், வேறெங்கானாலும், எல்லாம் சிறப்பாக அமைந்தன. அதுபோன்று, தேவனும், தமது பிள்ளைகளுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்குமென்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் அல்லவா? அது வியாதியாயிருந்தாலும் சரி, சிறையாயிருந்தாலும், மரணம், துயரம் எதுவாயிருப்பினும், அவரில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும். அவர் அங்ஙனம் வாக்களித்துள்ளதால், அது அவ்வாறே நிறைவேற வேண்டும். அவருக்குள் அது மறைபொருளாக நமக்குப் பேசப்பட்டுள்ளது. அவரே தேவனின் பரிபூரண சாயலாயிருந்தார்.

அவர் மறுபடியுமாக வரும்போது நாம் பார்க்கிறோம்...

61. ஞாபகமிருக்கட்டும், வெளிப்பாட்டின் மூலம் பெற்ற தன் மகத்தான தீர்க்கதரிசனத்தின் மூலமாய், யோசேப்பு உலகை அழிவினின்று காத்தான். யோசேப்பு இல்லையென்றால் உலகம் அழிந்து போயிருக்கும். அது போன்று, இயேசு இல்லையென்றால், இவ்வுலகம் அழிந்து போயிருக்கும், "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" (யோவான் 3:16). தேவன் ஜீவனைப் பாதுகாக்கிறார்.



தான் செய்கிறது என்னவென்பது அவருக்குத் தெரியும். அவர் தாமதித்தாலும் அது பரவாயில்லை. அதற்கு ஒரு நோக்கம் உண்டு. தான் செய்வது என்னவென்பதை அவர் அறிந்திருந்தார்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# ரோமர் 8:28

**அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.**



**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

---

## செய்தி: 64-02-13 அதன்பின் இயேசு வந்து அழைத்தார்

---

15. இப்பொழுது கவனியுங்கள் இவர் கள் (மார்த்தாள், மரியாள், லாசரு - தமிழாக்கியோன்) அவரை விசுவாசித்து சபையை விட்டுவெளியே வந்தவர்களாய் இருந்தனர். அவரைக் குறித்த எல்லா வற்றையும் வார்த்தையானது கூறியிருந் தது. அவர் அங்கிருந்தார். இவர்கள் வீட்டை விட்டு ஒரு நாள் அவர் வெளியில் சென்றார். மூன்று விதமான காரியங்களை குறித்து உங்களிடம் நான் பேசவிருக்கி றேன்: இயேசு அவர்களை விட்டுச் சென்றார்; மரணம் வந்தது; எல்லா நம்பிக்கையும் அற்றுப் போனது. இந்த

மூன்று காரியங்களைக் குறித்து சில நிமிடங்கள் நான் பேச விரும்புகிறேன்.

**இயேசு அவ்விடத்தை விட்டுச் சென்றார். அவர் சென்ற பிறகு வியாகுலமானது உட்பிரவேசித்தது.**

**இப்பொழுது அவர் உன்னையோ அல்லது நீ வசிக்கும் உன் வீட்டையோ விட்டுச் சென்ற பிறகு துன்பமானது வழியில் வந்து கொண்டிருக்கிறது.**

**இயேசுவானவர் சென்ற பிறகு சாத்தானிற்கு திறந்த வாசல் கிடைக்கின்றது.**

**அவர் சென்றுவிட்டார். அவர் சென்று விட்டப் பிறகு மரணம் உட்பிரவேசித்தது.**

**இயேசு வெளியில் சென்றால் மரணம் உள்ளே பிரவேசிக்கும். அவரிடமிருந்து பிரிக்கப்படுதல் என்றால் அது மரணமாகும். ஆகையால் இயேசு வெளியில் சென்ற பிறகு மரணம் உள்ளே வந்தது.**

16. மரணமானது லாசருவைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

லாசருவிற்காக வந்து ஜெபிக்க, தாங்கள் விசுவாசித்து, நேசித்த அவரிடத்தில் ஆள் அனுப்பினார்கள். ஏனென்றால் அவர் தேவன் என்று அவரைக் கண்டும் அறிந்தும் இருந்தார்கள். மார்த்தாள், நீர் தேவனிடத்தில் கேட்டுக் கொள்ளுவதெதுவோ அதை தேவன் உமக்கு தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன்'' என்று அதை வெளிப்படையாகக் கூறினாள். அவரும் தேவனும் ஒன்றாயிருக்கிறார்களென்றும் அவர் அந்த மணி நேரத்தின் வார்த்தை என்றும் அறிந்துக் கொண்டாள். அவரைத் தொடர்பு கொண்டால் போதும் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் அவரோ சென்று விட்டிருந்தார். அவரை கண்டுபிடிக்க அவர்களால் இயலவில்லை. அவரிடம் ஆள் அனுப்பின போது, அவர் வருவதற்கு

பதிலாக, தொடர்ந்து சென்று கொண்டிருந்தார். மறுபடியும் ஆள் அனுப்பினபோதும் வருவதற்கு பதிலாக இன்னும் தூரமாகச் சென்று கொண்டிருந்தார்.

**சில நேரங்களில் ஏன் இப்படி சம்பவிக்கின்றது என்று நாம் எண்ணலாம்.**

**ஆனால் வேதாகமமானது “தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும்” என்று கூறுகின்றதல்லவா?**

**தான் செய்கிறது என்னவென்பது அவருக்குத் தெரியும். அவர் தாமதித்தாலும் அது பரவாயில்லை. அதற்கு ஒரு நோக்கம் உண்டு. தான் செய்வது என்னவென்பதை அவர் அறிந்திருந்தார்.**

17. "மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், பிதாவானவர் செய்ய குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி வேறொன்றை

யும் தாமாய்ச் செய்யமாட்டார்" என்று பரிசுத்த யோவான் 5:19-ல் அவர் கூறுவதைநாம் காண்கிறோம். பிதாவானவர், அவர் சென்றுவிட வேண்டுமென்றும், இவ்வளவு நாட்கள் அப்புறம் இருக்க வேண்டுமென்றும் கூறி இருந்தார்.

அந்த நாட்கள் முடிந்த பின்பு, "நம்முடைய சிநேகிதன் லாசரு நித்திரை யடைந்திருக்கிறான்'' என்றார். பிறகு, "அது நல்லதற்கே" என்றார். ''நான் அங்கே இராததினால் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள் நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்'' என்று கூறினார். ஏனெனில் அவனை (லாசருவை - தமிழாக்கியோன்) சுகப்படுத்துவதற்கு அல்லது என்ன செய்யப்பட வேண்டும் என்று கூறுவதற்கு அவரை கண்டுபிடிக்க முயன்றுக் கொண்டிருந்தார்கள். ஆனால் என்ன செய்யப்பட வேண்டுமென்று அவர் அறிந்திருந்தார். அவர் (இயேசு - தமிழாக்

கியோன்) என்ன செய்ய வேண்டுமென்று நியமிக்கப்பட்டிருந்ததோ அதைச் செய் தார். அதாவது, பின் தங்கிவிடுதல்.

அவர் கல்லறையண்டை வந்தபோது கவனியுங்கள். அவர் மறுபடியுமாக இந்த வீட்டிற்கு திரும்பவும் வந்தடைந்தபோது அதை தெளிவாக வெளிப்படுத்தினார்.

18. எல்லா நம்பிக்கையும் அற்றுப் போனது. லாசரு மரித்துப் போனான். ''அவர் காட்சியில் இடைபடலாம், அவர் திரும்ப வருவார்'' என்று ஒவ்வொரு மணி நேரமும் இவர்கள் சிந்தித்துக் கொண் டிருந்தனர். கடைசியில் லாசருவின் மூச்சு நின்றது. அவன் மரித்தான்.

ஆகையால் அவர்கள் அவன் சரீரத்தி லிருந்து ரத்தத்தை எடுத்து விட்டு பிறகு அதை (லாசருவின் சரீரத்தை - தமிழாக் கியோன்) ஒரு துணியினாலும், நறுமண சாக்கு வகையினாலும் சுற்றி கல்லறையில் வைத்து அந்நாட்களின் முறைமையின்படி

அதை ஒரு கல்லினால் மூடினார்கள். பூமியில் அல்லது பாறையில் ஒரு சிறிய குழியை வைத்து அதின் மேல் கல்லால் மூடுதல் அவர்கள் பழக்கமாய் இருந்தது.

முதலாம் நாள் கடந்தது. இரண்டாம், மூன்றாம், நான்காம் நாட்களும் கடந்தன. அந்த மனிதன் கல்லறையில் அழுகிக் கொண்டிருந்தான். அநேகமாக அவனு டைய மூக்கானது அழுகி உள்ளே விழுந்திருக்கலாம். முதலாவதாக மூக்கு தான் அழுகி உள்ளே விழும் என்று நான் நினைக்கிறேன். பிறகு அவன் அழுகிக் கொண்டிருந்தான். அவனுடைய மாம்ச மானது பூமியின் தூளிற்கு சென்று கொண்டிருந்தது. ஆத்துமா அவனிடத்தி லிருந்து நான்கு நாள் பிரயாணமாக எங்கோ சென்றிருந்தது.

இவ்வாழ்க்கையில் அவனைத் திரும்ப வும் காண முடியும் என்ற நம்பிக்கை முற்றிலுமாக அற்றுப் போனது. முதலாம்

நாள் அல்லது இரண்டாம் நாளாவது அவர் வருவார் என்று அவர்கள் காத்திருந்தனர்! வரவில்லை. அவன் மரித்தான். அதன் பிறகும் அவர் வரவில்லை. பிறகு எல்லோருக்குள்ளும் பதறல் குடி கொண்டது.

19. சிறிது நேரம் கழித்து போதகர் வெளியில் வந்திருக்கிறார் என்று யாராவது சொல்லியிருக்கக் கூடும். உடனே மார்த்தாள் எழுந்து தெருவில் ஓடினாள்.

எல்லா நம்பிக்கையும் அற்றுப் போயிருந்த அந்த இருள் சூழ்ந்த வேளையில் தான் இயேசு வந்தார். அந்நேரத்தில்தான் அவர் எப்போதும் வருபவர். பாருங்கள்? அந்த இருண்ட வேளையில் இயேசுவானவர் காட்சியில் தோன்றுகிறார். இப்பொழுது கவனியுங்கள். அவர் வந்து மார்த்தாளை அழைக்கிறார். அவருடைய பிரசன்னமானது புது நம்பிக்கையை அளிக்கிறது. அவன் மரித்துப் போயிருந்த போதிலும் பரவாயில்லை. ஆனாலும்

அவருடைய பிரசன்னமானது புதிய நம்பிக்கையை கொண்டு வருகிறது.

20. என் நண்பனே, புற்று நோய், இருதய நோய் இருப்பதால் மருத்துவர்கள் கைவிட்டுவிட்ட நிலையில் இன்றிரவு இங்கு அமர்ந்திருக்கலாம். ஒரு வேளை நீ முடவனாய், நாற்காலியில் இருக்கலாம். எல்லா விஞ்ஞானமும் நீ தேறுவாய் என்ற நம்பிக்கையே இல்லை என்று கூறலாம். கால்ஷியமானது உன் எலும்புகளில் சேர்ந்துவிட்டிருப்பதால் அதை உன்னால் இயக்க முடியாமல் போகலாம். அல்லது உன் இருதயமானது மோசமான நிலையில் இருக்கலாம். நீ எந்த நிமிடத்தில் மரிப்பாய் என்று மருத்துவர் கூறலாம். ஓ, காச நோய், புற்று நோய் உள்ள அநேக மக்களுக்கு இது ஒருவேளை ஒரு கடைசி வாய்ப்பாக இருக்கலாம். மருத்துவர் உங்களை திருப்பி அனுப்பியிருக்கலாம். ஆனாலும் அவருடைய சமூகத்தில் இருப்பதும், இயேசு

கிறிஸ்துவினுடைய பிரசன்னம் இருப்பதை யும் நீ அடையாளம் கண்டுகொண்டால், அது உனக்கு நம்பிக்கையை திரும்பவும் அளிக்கும்.

21. சிலர் அதற்கு (வியாதிக்கு - தமிழாக்கியோன்) நீ முன்பு எப்போதும் அறியாத பெயரை இடலாம். ஆனால் ஒருவர் அங்கு ஒரு சபை உள்ளது என்று எனக்குத் தெரியும். "அவர்கள் தேவனில் விசுவாசம் வைத்து வியாதியஸ்தருக்காக ஜெபிக்கிறார்கள்'' என்று கூறினால் (நீ மரணத் தருவாயிலிருந்து அதற்கு ஆயத்த மாயிருந்தாலும்) பாருங்கள், உங்களுக்கு புதிய நம்பிக்கை துளிர்விட ஆரம்பிக் கிறது. அந்த இருள் சூழ்ந்த வேளையில் யாராவது அதைப் பற்றி அல்லது இயேசுவைப் பற்றி உனக்கு கூறும் போது அது அப்படித்தான் ஆகும். (புதிய நம்பிக்கை துளிர்விடும் - தமிழாக்கி

யோன்) அவருடைய பிரசன்னம் புதிய நம்பிக்கையைக் கொண்டு வரும்.

சென்ற இரவு நாம் கண்டது போல, உறுதிப்படுத்தப்பட்ட வார்த்தையானது எந்த ஒரு சந்தேகத்திற்கு இடமின்றி வெளிப்பட்டு 1900 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து, கல்வாரியிலே மரித்து, மூன்றாம் நாள் உயிரோடெழுந்து, சீஷர்களுக்கு காட்சி அளித்து, அவர்கள் கண்களைத் திறந்து, இந்நாளுக்கான வாக்குத்தத்தத்தை அளித்த அந்த இயேசுவானவர் இப்பொழுது இன்றிரவு நம்முடைய மத்தியில் உள்ளார் என்பதை நிரூபித்தது. அதே காரியத்தை அதுதாமே இன்றிரவு செய்யட்டும். அது மக்களுக்கு நம்பிக்கையை கொண்டு வர கடமைப்பட்டுள்ளது. புதிய நம்பிக்கை பிரகாசிக்கத் துவங்குகிறது.

22. யாராவது சிலர் ''சபையானது சிறிது காலமாக வறண்ட நிலையில் உள்ளது. நமக்கு சில மாதங்களாக நல்ல

புதிய தண்ணீர் கிடைப்பதில்லை. நாம் எழுப்புதலையும் அடையவில்லை. எல்லோரும் ஒரு தேக்க நிலையை அல்லது வேறெதையோ அடைந்துள்ளனர். நாம் சபைக்கு மாத்திரம் சென்று ஒரு பாடலைப் பாடிசில செய்திகளைக் கேட்டு பிறகு திரும்புகிறோம்'' என்று கூறலாம். நாம் வறண்ட நிலையை அடையும் பட்சத்தில் திடீரென்று இயேசு காட்சியில் வந்து நம்மை உயிர்ப்பித்து நமக்கு புதிதான ஒன்றைத் தருகிறார். அதைச் செய்ய அவர் அங்கு எப்போதும் உள்ளார். இயேசு உள்ளே வரும்போது புதிய நம்பிக்கையும் உள்ளே வருகின்றது. அவருடைய பிரசன்னம் புதிய நம்பிக்கையை கொண்டு வரும்.

அவள் (மார்த்தாள் - தமிழாக்கியோன்) அக்காலத்தைக் கண்டு அவர் தான் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய வார்த் தையாயிருந்தார் என்று அறிந்திருந்தாள்.

அல்லவென்றால் அவள் இன்னுமாய் கோட்பாடுகளில் உறுதியாகவும், சபை யைச் சார்ந்தவளாயும் இருந்திருப்பாள். ஆனால், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அந்த வார்த்தையை அவர் வெளிப்படுத் தினார் என்றும், அவரே அந்த ஜீவிக்கிற வார்த்தையென்றும் அவள் கண்டு அறிந்தும் இருந்தாள். அவள் அதைப்பற்றி கேட்டபோது, எவ்வளவு பேர் அவளை விமர்சித்த போதும் அவள் அதைப் பொருட்படுத்தவில்லை, அவருக்காக என்னவெல்லாம் செய்ய பிரயாசித்தாளோ அதையெல்லாம், கடினமாகச் செயல் பட்டுச் செய்தாள் பாருங்கள்? அவர் அந்த வெளிப்படுத்தப்பட்ட வார்த்தை என்பதை அவள் அறிந்திருந்தாள்.

பாருங்கள், தேவன் தமது வகுப்பட்ட திட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருந்தார். “தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது” அது என்னவாயிருந்தாலும் சரி.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

~ 2 ~

# ரோமர் 8:28

**அன்றியும், அவருடைய
தீர்மானத்தின்படி
அழைக்கப்பட்டவர்களாய்த்
தேவனிடத்தில்
அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும்
நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று
அறிந்திருக்கிறோம்.**



**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

---

# செய்தி: 60-10-02 இனத்தான் மீட்பர்

---

50. இந்த கதையானது இப்படி தொடங்குகிறது. நகோமி என்னும் பெயருடைய அன்புக்குகந்த, இனிமையான ஸ்திரீ ஒருத்தி இருந்தாள். நகோமி என்றால் "இன்பகரமானவள்" என்று பொருள். அவளுடைய கணவன் பெயர் எலிமெலேக்கு. அப்படி யென்றால் "வழிபாடு" என்று பொருள். அவளுடைய குடும்பம் இன்பரகமான வழிபாடாய் விளங்கினது. அவர்களுக்கு மக்லோன் என்னும் குமாரன் இருந்தான்.... "வியாதி" என்று பொருள். மற்றொருவன் கிலியோன். அப்படி யென்றால் "களைப்பு, துக்கம், வருத்தம்"

என்று பொருள். அதுதான் அவர்கள் குடும்பம்.

51. இஸ்ரவேல் தேசத்தில் பஞ்சம் உண்டாயிற்று. ஒரு யூதன் செய்யும் முதல் தவறு தன் சொந்த நாட்டை விட்டு வெளியேறுவதே. தேவன் அவர்களுக்கு அந்த தேசத்தைக் கொடுத்தார். ஆபிரகா முக்கு அந்த தேசம் கொடுக்கப்பட்ட போது, அவன் அந்த தேசத்தை விட்டு வெளியேறக் கூடாதென்று தேவன் அவனுக்கு கட்டளையிட்டார். ஆனால் அவனோ கேராருக்கு போகும் தவறைச் செய்து தொல்லையில் அகப்பட்டுக் கொண்டான். ஒரு யூதன் பாலஸ்தீனாவை விட்டு வெளியே செல்லக் கூடாது. அது அவனுக்கு அளிக்கப்பட்ட இடம்.

52. அவர்கள் உலகெங்கும் விரட்டி யடிக்கப்பட்டு, இப்பொழுது தங்கள் சொந்த நாட்டிற்கு திரும்பிக் கொண் டிருக்கின்றனர். ஓ, இன்று காலை நமக்கு

ஒரு அழகான வரலாறு இங்குள்ளது, அவர்கள் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

53. நகோமி பஞ்சத்தின் காரணமாக வெளியே சென்றாள் அவளும் எலிமெலேக்கும். அவர்கள் மோவாப் தேசத்துக்கு சென்றனர்.

54. இந்த கதையின் முக்கிய அம்சத்துக்கு வருவோம்... நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கும் போது, அது என்னவென்று கிரகித்துக் கொள்வீர்கள்.

இப்பொழுது மோவாபியர் முறை தவறிப் பிறந்த குழந்தையிலிருந்து தோன்றினர். அது லோத்தின் பிள்ளை. அவர்கள் தேவனுடைய கிருபையால் சோதோமின் அக்கினியிலிருந்து தப்பின பிறகு, லோத்தின் குமாரத்திகள் தங்கள் தகப்பனுக்கு குடிக்கக் கொடுத்து அவனுடன் மனைவியைப் போல் வாழ்ந்தனர். அவர்கள் இருவருக்கும் குழந்தை பிறந்தது. அவர்களின் ஒருவனான மோவாபிலிருந்துதான்

மோவாபிய ஜாதி தோன்றினது. அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று கருதப்பட்டனர், ஆனால் அஞ்ஞான கொள்கைகளுடன் கலந்திருந்தனர். பாருங்கள். இஸ்ரவேலருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டு அளிக்கப்பட்ட தேசம் எவ்வளவு மோசமான நிலையிலிருந்த போதிலும், அதை விட்டு பிரயாணம் செய்து வேறொரு தேசத்தில் குடியேறினது தொல்லையை விளைவித்தது.

55. ஆகவே எந்த சமயத்திலும் ஒரு விசுவாசி தேவனால் அளிக்கப்பட்ட தன்னுடைய ஸ்தானத்தை விட்டு அகன்று போவான் என்றால்! அநேக சமயங்களில் அரசியல், இந்த தேர்தல் போன்றது வருகின்றது. ஒரு நல்ல மனிதன் நல்ல மனிதனாகவே இருக்கலாம். ஆனால் அவன் இந்த இடத்தை விட்டு விலகிச் செல் கிறான். எனக்குத் தெரிந்த ஒரு போதகர் உண்டு. அவர் நகராண்மைக் கழகத் தலைவர் தேர்தலுக்கு நின்றார்.

அவர் அப்படி செய்த போது, தமக்கு அளிக்கப்பட்டிருந்த போதக உத்தியோ கத்தை விட்டு விலகினார். சாத்தான் அவரை மேற்கொண்டான்.

56. எந்த ஒரு கிறிஸ்தவனும் அளிக்கப்பட்ட இடங்களை விட்டு அகன்று சென்றால், "நல்லது, இன்றிரவு சென்று, நீச்சல் குள அறையில் பையன்களுடன் சிறிது நேரம் உட்கார்ந்து கொண்டிருக்கப் போகிறேன். சிறிது மது அருந்துவதனால் பாதகம் ஒன்றுமில்லை" என்று கூறுவா னானால், நீங்கள் உங்கள் இடத்திலிருந்து விலகிச் செல்கின்றீர்கள். திரும்பி வாருங் கள். தொல்லைக்கான உங்கள் வழியை நீங்களே அமைத்துக் கொள்கிறீர்கள்.

57. "ஓ, மற்ற பெண்கள் புகை பிடிக்கின்றார்கள், நானும் ஒரு சிகரெட்டை புகைத்துப் பார்க்கிறேன்". நீங்கள் இடத்தி லிருந்து விலகிவிட்டீர்கள். அப்படிச் செய் யாதீர்கள். உங்கள் சொந்த இருப்பிடங்

களிலே நிலைத்திருங்கள். “ஓ, இங்குள்ள அனைவரும் என்னை பழைய நாகரீக கிழவி” என்கின்றனர். அவர்கள் என்னை “பழமை நாகரீகம் கொண்டவன்” என்றழைக்கின்றனர்.” பரவாயில்லை, என்னவானாலும் அதில் நிலைத்திரு! அதுதான் உன் இடம். கிறிஸ்துவுக்குள் தங்கியிரு.

58. நகோமி பஞ்சத்தின் காரணமாக, தன் நாட்டை விட்டு வெளியேறி ஆகாரம் தேடி மோவாப் தேசத்துக்கு சென்றாள். அவள் அப்படி செய்ய வேண்டிய அவசியம் இருக்கவில்லை. ஏனெனில் மற்றவர்கள் யூதாவிலுள்ள பெத்லெகேமில் தங்கியிருந்தார்கள். பெத்லெகேம் என்றால்: பெத்தேல் என்றால் “தேவனுடைய வீடு” என்று பொருள். துதிகளின் வீடு. அவர்கள் அங்கு வசித்தனர்.

59. அவள் தன் கணவனுடன் வெளியேறினாள். அவளுடைய இரண்டு குமாரர்களும் மோவாபிய பெண்களை

மணந்தனர். ஏதாவதொன்று நடக்க வேண்டுமென்று தேவன் தீர்மானித்திருந்தால், அது எப்படியும் நடந்தே தீரும். ஆகையால் தான் நான் முன்குறித்தல், தேவனுடைய முன்னறிவு ஆகியவைகளில் நிச்சயம் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

60. பிறகு மரணம் குடும்பத்தை தாக்கினதாக நாம் காண்கிறோம். அப்பொழுது அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு வருகின்றனர். குமாரர்கள் மரிக்கின்றனர்... இரண்டு பையன்களும் இறந்து விட்டனர், தகப்பனும் இறந்து விட்டார். நகோமி ரூத்துடனும், ஓர்பாளுடனும் புறப்படுகிறாள்.

61. இன்று காலை நான் வயது சென்ற நகோமியை வைதீக சபையாகிய யூத வைதிக சபைக்கும், புறஜாதியாகிய மோவாபியரைச் சேர்ந்த ரூத்தை கிறிஸ்தவ சபை, புது சபைக்கும் ஒப்பிட விரும்புகிறேன்.

62. இதை நான் நான்கு வெவ்வேறு அம்சங்களில் அணுக விரும்புகிறேன். ரூத்... இதை இங்கு எழுதி வைத்திருக் கிறேன். ரூத் – தீர்மானம் செய்தல் (அவள் தீர்மானிக்கிறாள்), ரூத் – சேவை செய்தல், ரூத் – இளைப்பாறுதல், ரூத் – பலனைப் பெறுதல். நாம் மறுபடியும் கூறுவோம். ரூத் – தீர்மானம் செய்தல், அவள் தீர்மானம் செய்த பிறகு, ரூத் – சேவை செய்தல், அதன் பிறகு ரூத் இளைப்பாறுகிறாள், முடிவில் ரூத் பலனைப் பெறுகிறாள்.

63. இப்பொழுது, அந்த வரலாற்றில் ஒரு நேரம் வருகிறது. ரூத் சபைக்கு அல்லது கிறிஸ்தவனுக்கு அடையாளமாக இருக்கிறாள்... எவ்வாறு ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் முழு கிறிஸ்தவ தேசத்திற்கு பிரதிநிதியாயிருக்கின்றனரோ அவ்வாறே. பிரதிநிதியாக இருக்கிறார். அது உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் உங்கள் நடத்தையில், நீங்கள் நடந்து கொள்ளும் விதத்திலும் உங்கள் செய்கை

யிலும், கிறிஸ்துவின் சரீரம் முழுவதற்கும் பிரதிநிதியாக விளங்குகின்றீர்கள். நீங்கள் “நான் ஒரு சாதாரண அங்கத்தினன் மாத்திரமே” எனலாம். அதனால் பரவா யில்லை. நீங்கள் கிறிஸ்தவன் என்னும் பெயரைச் சூடிக் கொள்ளும்போது, கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் பிரதிநிதிகளாயிருக்கிறீர்கள். நீங்கள் அதன் பிரகாரம் வாழவேண்டும். நீங்கள் நற்பண் புள்ள மனிதராகவும் ஸ்திரீகளாகவும் வாழவேண்டும். உலகத்தின் காரியங்களை செய்யவே செய்யாதீர்கள். ஏனெனில் பரலோகத்தின் கண்கள், பூலோகத்தின் கண்கள் இவையனைத்தும், நீங்கள் கிறிஸ்தவர்களாக நடந்து கொள்கிறீர்களா என்று காண உங்களையே நோக்கிக் கொண்டிருக்கின்றன. நீங்கள் எவ்வளவு பலவீனமாயிருந்த போதிலும், நீங்கள் எவ்வளவு சிறியவராயிருந்தபோதிலும், தலை நிமிர்ந்து நில்லுங்கள். ஏனெனில் நீங்கள் ஒரு கிறிஸ்தவர்.

64. இப்பொழுது, ரூத் ஒரு அஞ்ஞானி. அவள் விக்கிரகங்களை வழிபட்டாள். ஓர்பாளும் அப்படியே. அவர்கள் தங்கள் மாமியாருடன் திரும்பி வந்து கொண்டிருந்தனர். யூதாவிலுள்ள பெத்லெகேமில் தேவன் வாதையை எடுத்துப் போட்டார் என்றும், அங்கு ஜனங்களுக்கு உண்ண ஆகாரம் உள்ளதென்றும் நகோமி கேள்விப் பட்டாள். அங்கே அவள் சுமார் பத்து ஆண்டுகள் இருந்தாள். "சுமார் பத்து ஆண்டுகள்" என்று வரலாற்று அறிஞரான ஏர்ஹேயிம் (Eersheim) கூறுகிறார்.

65. அவள் வருத்தத்துடன் (அவள் கணவன் இறந்து போனான், குமாரர்களும் இறந்து போயினர்) தன் இரண்டு மருமக்களுடன் திரும்ப வருகிறாள். அவள் அவர்களைத் திரும்பிப் பார்த்து, "நீங்கள் ஏன் என்னுடன் வருகிறீர்கள்? உங்களுக்கு தொல்லையேயன்றி வேறொன்றும் இருக்காது. கர்த்தருடைய கை எனக்கு விரோத

மாயிருக்கிறதினால் எனக்கு மிகுந்த விசனம் இருக்கிறது” என்றாள்.

66. அது தேவனுடைய திட்டம் என்று அறியாமல் எத்தனை முறை இஸ்ரவேல் அப்படி நினைத்திருக்கிறது? எருசலே முக்கு வெளியே அழுகையின் சுவர் (Weeping Wall) இன்னும் அங்கே இருக்கிறது. தேவாலயத்தின் பழைய கற்களைப் பொறுக்கி அவர்கள் அந்த சுவற்றைக் கட்டினார்கள். ஆகவே “யேகோ வாவே!” என்று யேகோவாவை நோக்கி கெஞ்சி கதறுகின்ற அந்த யூத கரங்களி னாலும், கண்ணீர்களினாலும் அது வழவழப்பாக, தேய்ந்து காணப்படுகிறது. அவர்களுடைய நேரம் சமீபித்து விட்டது என்பதை அவர்கள் அறியாமலிருக்கின் றனர். அழுகை யின் சுவர் கட்டப்பட்டுள்ள கற்களைக் கொண்டு ஒரு காலத்தில் உடன்படிக்கை பெட்டியின் வாசஸ்தலம் கட்டப்பட்டிருந்தது. தாவீது ராஜா இந்த

கற்களை நோக்கிப் பார்த்தான். "ஓ, யேகோவாவே, நீர் எங்கே?" என்று அவர்கள் கதறுகின்றனர். பாருங்கள், அவர்களுடைய ராஜா, அவர்களுடைய மீட்பர் விரைவில் திரும்ப வருவார் என்பதை அவர்கள் அறியாமலிருக்கின்றனர். அவர்கள் சிறிது காலத்துக்கு புறம்பாக்கப்பட்டிருக்க வேண்டும்.

67. நகோமி, "கர்த்தருடைய கை ஏன் எனக்கும் என் மருமக்களுக்கும் விரோதமாயிருக்கிறது? தேவன் என்னை புறம்பாக்கி விட்டார். நான் புறம்பாக்கப்பட்டவள். நான் புறம்பாக்கப்படுவதற்கு என்ன செய்தேன் என்று தெரியவில்லை" என்று வியந்தாள்.

68. **பாருங்கள், தேவன் தமது வகுப்பட்ட திட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருந்தார். "தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது" அது என்னவாயிருந்தாலும் சரி.**

69. நகோமி மருமக்களிடம், "நீங்கள் இருவரும் உங்கள் தாய் வீட்டுக்குத் திரும்பிப் போய் அங்கு இளைப்பாறுங் கள். உங்கள் கணவன்மார்கள் இறந்து விட்டார்கள். நீங்கள் இன்னும் அழகுள்ள இளம் பெண்களாக இருக்கிறீர்கள். திரும்பிப் போங்கள்! நீங்கள் எங்கிருந்து வந்தீர்களோ, அவ்விடத்துக்கே திரும்பிச் சென்று இளைப்பாறுதலைக் கண்டடை யுங்கள். கர்த்தர் உங்களுக்குத் தயை செய்வாராக. ஏனெனில் நீங்கள் மரித்துப் போனவர்களுக்கு தயை செய்தீர்கள். உங்கள் கணவன்மார் இறந்த பிறகும் நீங்கள் உத்தமமான வாழ்க்கை வாழ்ந்தீர் கள். கணவனில்லாத விதவை யாகிய எனக்கும் நீங்கள் தயை பாராட்டி என்னுடன் கூட இருந்தீர்கள். திரும்பிப் போங்கள்! தேவன் உங்கள் வீட்டில் உங்களுக்கு இளைப்பாறுதலைத் தருவா ராக" என்றாள். அவர்கள் அழுதார்கள்.

70. நகோமி, "நான் வயது சென்றவள். எனக்கு குழந்தைகள் பிறக்காது. அப்படி நான் புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டு பிள்ளைகளைப் பெற்றாலும் அதனால் என்ன பயன்? அவர்கள் பெரியவர்களாகும் மட்டும் நீங்கள் பொறுத்திருக்க முடியாது" என்றாள். அது அந்த காலத்திலிருந்த சட்டம். அதாவது ஒருவன் மரித்தால், விவாகமாகாமலிருக்கும் அவனுடைய சகோதரன், மரித்துப் போன அவனுடைய சகோதரனின் மனைவியை மணந்து அவனுடைய பெயரை நிலை நாட்ட வேண்டும். "பிள்ளைகள் பெரியவர்களாகும் மட்டும் உங்களால் பொறுத்திருக்கக் கூடாது. ஆகவே நீங்கள் தாய் வீட்டுக்குத் திரும்பிப் போய் உங்கள் இருவருக்கும் வாய்க்கும் புருஷனுடைய வீட்டிலே சுகமாய் வாழ்ந்திருங்கள்" என்றாள்.

71. ஓர்பாள், ஒரு காலத்தில் தொடங்கின வெதுவெதுப்பான சபைக்கு: வழி

நெடுக செல்லாத சபைக்கு அடையாள மாயிருக்கிறாள். அவள், "இது நல்லதாக படுகிறது" என்று சொல்லி, தன் மாமியாரை முத்தமிட்டு, திரும்பிப் போய் விட்டாள். அவள்வெதுவெதுப்பான விசுவாசிக்கு - இயேசுவைக் கிறிஸ்துவென்று விசுவா சித்து, அதன் பிறகு அவள் எதிலிருந்து வெளி வந்தாளோ அதற்கே திரும்பிச் செல்லும் ஒருத்திக்கு நிழலாயிருக்கிறாள்; நிந்தைப்படும் சில தேவனுடைய பிள்ளைகளுடன் தன் வழியைத்தெரிந்துக் கொண்டு அதன் பிறகு திரும்பிச் செல்லும் ஒரு மனிதனுக்கு; வேதம் கூறுவது போல், "நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினதற்கு" அடையாளமாயிருக் கிறாள்.

72. இப்பொழுது, அவள் தன் தேவர் களிடம் திரும்பினாள். நாமும் அநேக சமயங்களில் நமக்கு தொடக்கத்திலிருந்த தேவர்களிடத்திற்கு திரும்பி விடுகிறோம்.

ஒருக்கால் தவறான காரியங்கள் மேல் நமது கண்கள் இச்சித்திருக்கக் கூடும். நாம் மறுபடியும் இச்சிப்பதற்கு திரும்பி விடுகிறோம். ஒருக்கால் நமக்கு குடிப்பழக்கம், என்னும் விக்கிரகங்களும், புகைபிடித்தல் என்னும் விக்கிரகங்களும், பொய் பேசுதல் என்னும் விக்கிரகங்களும், திருடுதல் என்னும் விக்கிரகங்களும், என்னும் எல்லா விதமான விக்கிரகங்களும், இருந்திருக்கலாம். அதன்பிறகு நாம் கிறிஸ்துவை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்று, மறுபடியும் அவை களுக்கே திரும்பி விடுகிறோம். எவ்வளவு விசனமான செயல்! ஓர்பாளின் பெயர் மறுபடியும் வேதத்தில் கூறப்படவில்லை என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். அவளுடைய தீர்மானத்தின் நிமித்தம் அவள் புறம் பாக்கப்பட்டாள்.

“முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தைத் தேடுங்கள்.” அது உண்மை என்று நீங்கள் கண்டிருக்கிறீர்களா? தேவனை முதலில் வையுங்கள். முதலில் உங்கள் தசமபாகங்களைச் செலுத்துங்கள். முதலாவதாக எல்லா காரியத்தையும் செலுத்துங்கள். தேவனுக்கு செலுத்துங்கள். காலையில் முதலில் ஜெபம் செய்யுங்கள். நாள் முழுவதும் ஜெபியுங்கள். ஒவ்வொரு காரியத்திலும் தேவனுக்கு முதல் இடம் கொடுங்கள். நீங்கள் ஒரு சாட்சியாய் இருப்பீர்கள்.

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

செய்தி: **53-0405E சாட்சிகள்**



கர்த்தருக்கு நன்றி செலுத்தாமல், நீங்கள் எந்த உணவையும் புசிக்கலாகாது. ஏனென்றால் அது தேவனுடைய வார்த்தையினாலும், ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படுகிறது. பாருங்கள்? அதை நீங்கள் புசிக்கும் போது கூற வேண்டியதாவது: “கர்த்தராகிய இயேசுவே, நீர் இந்த ஆகாரத்தை எனக்காக ஆயத்தப்படுத்தினீர். இப்போது, விசுவாசத்தினாலே, இந்த ஆகாரத்தைப் பரிசுத்தப்படுத்துகிறேன்; அது எங்கள் சரீரங்களுக்கு பெலத்தை அளிப்பதாக.”



செய்தி: கேள்விகளும் பதில்களும் #4, 64-0830 E, பத்தி எண் 181

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

Only believe, Only believe
All things are possible,
Only believe.



www.voiceofeagle.in